

திண்டுக்கல் மாவட்டம், அஞ்சுக்குழிப்பட்டியில் ரூ.41.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட துணை சுகாதார நிலையத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக அமைச்சர் அர.சக்கரபாணி 10.08.2024 அன்று திறந்து வைத்தார். அருகில் மாவட்ட ஆட்சித் தலைவர் பூங்கொடி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திலகவதி உட்பட பலர் உள்ளனர்.



திருப்பூர் மாநகராட்சி, 15 வேலம்பாளையத்தில் கட்டப்பட்டு வரும் அரசு மருத்துவமனையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆய்வு மேற்கொண்டார். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், தெற்கு மாநகர கழக செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், வடக்கு மாநகர கழக செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், மாநகராட்சி ஆணையாளர் பவன்குமார் ஜி.கிரியப்பனவர், பகுதி கழக செயலாளர் கொ.ராமதாஸ் உள்பட மாவட்ட, மாநகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### ஆத்தூர் தொகுதியில் உள்ள

# கழகத்தினர் இல்ல விழாக்களில் கலந்துகொள்ளும் அமைச்சர் ஐ.பெரியசாமி!

## கட்சி நிர்வாகிகள் – பொதுமக்கள் பாராட்டு!

திண்டுக்கல், ஆக. 13 -

ஜாதி, இன மத வேறுபாடு இன்றி அனைத்து தி.மு.க.வினர்களின் இல்ல விழாக்களில் கலந்து கொள்ளும் அமைச்சர் ஐ பெரியசாமி அவர்களுக்கு கட்சி நிர்வாகிகள், சமூக ஆர்வலர்கள் மனதார பாராட்டும் நன்றியும் தெரிவித்துள்ளனர். விழாக்களுக்கு வந்த அமைச்சரிடம் பொதுமக்கள் மருத்துவ உதவி கேட்ட போது உடனடியாக உதவி செய்ததோடு அதே இடத்தில் கையெழுத்து போட்டு கொடுத்ததால் கட்சி நிர்வாகிகள் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்றத் தொகுதியில் தொடர்ந்து 33 வருடங்களாக போட்டியிட்டு வெற்றி பெற்று வருபவர் திமுக மாநில துணை பொதுச்செயலாளரும் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஆன ஐ. பெரியசாமி அவர்கள் கடந்த தி.மு.க. ஆட்சியின் போது பல்வேறு துறைகளில் அமைச்சராக இருந்தார். குறிப்பாக, வருவாய்த் துறை, சிறைத்துறை, வீட்டு வசதித்துறை, சத்துணவு துறை, முன்னாள் ராணுவத்தினர் நலன், தற்போது மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தி.மு.க. ஆட்சியில் கூட்டுற வுத் துறை அமைச்சராக இருந்து அதன் பின்பு தற்போது ஊரக வளர்ச்சி துறை அமைச்சராக பதவியில் உள்ளார் 33 வருடங்களாக கட்சி நிர்வாகிகளின் இந்த விழாக்களுக்கு தவறாமல் செல்வதை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் வாடிக்கையாக கொண்டுள்ளார்.

தி.மு.க.வில் உள்ள கட்சி நிர்வாகிகள் ஏழ்மை நிலையில் இருந்தாலும் அவர்களின் இல்ல விழாக்களுக்கு செல்வதில் அமைச்சர் அவர்கள் எவ்வித தயக்கமும் காட்டுவதில்லை. குறிப்பாக அமைச்சர் ஐ. பெரியசாமி அவர்கள் சென்னையில் இருந்தால் அங்கிருந்து வந்தவுடன் முதல் வேலையாக ஆத்தூர் தொகுதியில் உள்ள தி.மு.க. நிர்வாகிகள் இல்ல விழாக்களுக்கு சென்று அவர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்துவதை வழக்கமாகக் கொண்டுள்ளார்.

12ந் தேதியன்று 20க்கும் மேற்பட்ட காதணி விழா மற்றும் இதர விழாக்களில் கலந்து கொண்டு ரெட்டியார் சத்திரம் ஒன்றியம் கன்னிவாடி அருகே உள்ள மேலதிப்பம்பட்டிக்கு வந்தார் அங்கு நடைபெற்ற ஒன்றிய குழு உறுப்பினர் திருப்பதி இல்ல காதணி விழாவில் கலந்து கொண்டு அடுத்த நிகழ்ச்சிக்கு காரில் செல்லும் போது இடைமறித்த கசவனம்பட்டியை சேர்ந்த ஒருவர் மருத்துவ உதவி தேவைப்படுவதாகவும் அதற்கு சிபாரிசு கடிதம் வேண்டும் என கூறினார். உடனடியாக அமைச்சர் அதே இடத்தில் கடிதம் கொடுத்து அவரை மகிழ்ச்சியில் ஆழ்த்தினார். அப்போது பேசிய அமைச்சர் பெரியசாமி மருத்துவ உதவி, கல்வி உதவி இவற்றை செய்வதில் நான் எவ்வித தயக்கம் காட்டுவதில்லை. காரணம் இவை இரண்டும் மனித குலத்திற்கு முக்கியமான உதவிகளாகத்தான் நான் கருதுகிறேன், கலைஞர் ஆட்சியின் போது கலைஞரின் காப்பீட்டு திட்ட மூலம் நூற்றுக்கணக்கான மனிதர்களை காப்பாற்றியதை நான் இன்று வரை பெருமையாக நினைக்கிறேன் என்று சொல்லி விட்டு அடுத்த கிராமத்தில் நடைபெறும் விழாக்களுக்கு சென்று விட்டார். இதை பார்த்த பொதுமக்களும் ,கட்சி நிர்வாகிகளும், அமைச்சர் ஐ. பெரியசாமியை மனதார அவர்களை மனதார பாராட்டினார்கள்.

நிகழ்ச்சியின் போது தி.மு.க. மாநில வர்த்தக வர்த்தகர் அணி இணை செயலாளர் ஜெயன் ரெட்டியார்சத்திரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. செயலாளரு மான ப.க.சிவகுருசாமி , தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆத்தூர் நடராஜன், தண்டபானி, தி.மு.க. நிர்வாகி அம்பை ரவி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கிருஷ்ணன், மலரவண், ஆத்தூர் சட்டமன்ற உறுப்பினர் முகாம் அலுவலக அலுவலர் வடிவேல்முருகன், ரெட்டியார் சத்திரம் வடக்கு ஒன்றிய செயலாளர் மணி, ஒன்றிய துணைப்பெருந்தலைவர் ராஜேஸ்வரி, மாவட்ட கவுன்சிலர் சுப்புலெட்சுமி சண்முகம், , மாவட்ட வர்த்தக அணி செயலாளர் பொன் முருகன், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ் ரெட்டியார்சத்திரம் நில வள வங்கி மேலாளர் சக்கரவர்த்தி (எ) மணிமாறன் பொதுக்குழு உறுப்பினர் பெருமாள், குட்டத்துப்பட்டி டென்னி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ராஜேஸ்பெருமாள், ஒன்றிய குழு உறுப்பினர்கள் காளீஸ்வரி மலைச்சாமி, , ரெட்டியார்சத்திரம் ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் செல்வம், இளைஞர் அணி அமைப்பாளர் புதுக்கோட்டை ரமேஷ், மற்றும் கோயில் கண்ணன் உட்பட திமுக நிர்வாகி நிர்வாகிகள் பலர்உடனிருந்தனர்.

### நாகையில் மாவட்ட அளவிலான

# அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமை! என்.கௌதமன் – உ.மதிவாணன் பங்கேற்பு!

நாகை, ஆக. 13 -

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலக முதன்மை கூட்ட அரங்கில் மாவட்ட அளவிலான அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழக தலைவர் என்.கௌதமன், தமிழ்நாடு தாட்கோ கழக தலைவர் உ.மதிவாணன், நாகப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.முகமது ஷா நவாஸ், கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.பி.நாகைமாலி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பேசுகையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாவட்டங்களில் வளர்ச்சித் திட்டப் பணிகளை கண்காணித்து துரிதப்படுத்திட அமைச்சர் பெருமக்களை நியமித்துள்ளார்கள்.

அதனடிப்படையில் நாகப்பட்டினம் மாவட்டத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் தொடர்பாக துறை வாரியாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மக்களிடம் பெறப்படும் கோரிக்கை மனுக்களுக்கு உடனடி தீர்வு காணப்பட வேண்டும். நகராட்சி, பேரூராட்சி, அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகளை தூய்மையாக வைத்திருக்க வேண்டும்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி அனைத்து வளர்ச்சித்திட்டப்பணிகளும் தொடர்ந்து கண்காணித்து செயல்படுத்திட தொடர் நடவடிக்கையாக மேற்கொள்ளப்படும்.

குறிப்பாக சாதாரண மக்களுக்கு தேவையான இலவச வீட்டு மனைப் பட்டா, முதியோர் ஓய்வூதியம் உள்ளிட்டவைகள் குறித்த பயனாளிகளை தேர்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி தெரிவித்தார்.

முன்னதாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் கீழ் செயல்பட்டு வரும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் சார்பில் இணைமானிய நிதியாக 9 பயனாளிகளுக்கு ரூ.53 இலட்சம் மதிப்பீட்டில் வங்கி கடனுக்கான ஆணையினை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி வழங்கினார்.




முதலமைச்சர் அவர்கள் நேற்று காணொளிக்காட்சி வாயிலாக, ”போதைப் பொருள் இல்லாத தமிழ்நாடு விழிப்புணர்வு நிகழ்ச்சியை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்ததை தொடர்ந்து இராமநாதபுரம் செய்யது அம்மாள் மேல்நிலைப் பள்ளியில் மாவட்டச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராம லிங்கம், எம்.எல்.ஏ, மாவட்ட ஆட்சித் தலைவர் சிம்ரன் சீத் சிங், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் ஜி. சந்திஸ், இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ் கனி, கலந்து கொண்டு மாணவ, மாணவிகள் போதைப் பொருள் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்றுக்கொள்ளும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் இராமநாதபுரம் நகர் மன்ற தலைவர் கார்மேகம், துணைத் தலைவர் பிரவீன் தங்கம், ராமேஸ்வரம் நகர் மன்ற தலைவர் நாசர் கான், மாவட்ட விவசாய அணி துணை செயலாளர் குணசேகரன் மற்றும் ஒன்றிய செயலாளர் வழக்கறிஞர் கதிரவன், கே.ஜே.பிரவீன், முத்துக்குமார் உட்பட மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ரேணுகா மற்றும் ஆசிரியர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### 2026 சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் பொருட்டு

# நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பு அணிகளின் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் அறிவிப்பு!



நெல்லை, ஆக. 13 -

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களால் அமைக்கப்பட்ட தி.மு.க. ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவின்படி வரவிருக்கும் 2026 சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் பொருட்டு நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க.சார்பு அணிகளின் மாவட்ட,மாநகர அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் கீழ்க் கண்ட அட்டவணைப் படி மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற உள்ளது. இதில் சார்பு அணிகளின் மாவட்ட, மாநகர நிர்வாகிகள் தவறாமல் கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன். என நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் தெரிவித்துள்ளார்.

அது பற்றிய விவரம் வருமாறு.

நேற்று (12.08.2024 - திங்கட்கிழமை) மாலை 6 மணி மாணவரணி மாலை 6:30 மணி தகவல் தொழில் நுட்ப அணி கூட்டம் நடைபெற்றது.

இன்று (13.08.2024 - செவ்வாய்க்கிழமை) மாலை 6 மணி மகளிர் அணி,மாலை 630 மணி மகளிர் தொண்டரணி, இரவு 7 மணி இளைஞரணி,

14.08.2024 புதன் கிழமை மாலை 6:00 மணி இலக்கிய அணி,630 மணி கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை,இரவு 7 மணி அமைப்புசாரா ஓட்டுனர் அணி.

15.08.2024 வியாழக்கிழமை மாலை 6:00 மணி அயலக அணி,630 மணி சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, இரவு 7 மணி வர்த்தக அணி, 16.08.2024 வெள்ளிக்கிழமை மாலை 6 மணி தொண்டரணி,630 மணி தொழிலாளர் அணி,இரவு 7 மணி சுற்றுச்சூழல் அணி, 17.08.2024 சனிக்கிழமை மாலை 6 மணி விவசாய அணி,630 மணி விவசாய தொழிலாளரணி, இரவு 7 மணி நெசவாளர் அணி,18.08.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 6:00 மணி வழக்கறிஞர் அணி,6 30 மணி மருத்துவரணி,இரவு 7 மணி பொறியாளர் அணி,மாலை 6 மணி விளையாட்டு மேம்பாட்டு அணி,630 மணி மீனவரணி,இரவு 7 மணி ஆதிதிராவிடர் நலக்குழு ஆகியவற்றின் சார்பில் நடைபெறுகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### விழுப்புரம் மாவட்டத்தில்

# 3 ஆண்டுகளில் 15 ஆயிரம் இலவச வீட்டுமனை பட்டாக்கள்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழங்கி பேச்சு!



திண்டிவனம், ஆக. 13 -

விழுப்புரம் மாவட்டம் ஊரக வளர்ச்சி துறை சார்பில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் மயிலம் ஒன்றியத்தில் உள்ள கிராமங்களில் வீடு கட்டுவதற்கான ஆணைகள் வழங்கும் நிகழ்ச்சி மயிலம் தனியார் மண்டபத்தில் நடைபெற்றது.

மயிலம் ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன் தலைமை வகித்தார்.துணை சேர்மன் புனிதா ராமஜெயம் முன்னிலை வகித்தார்.

வட்டார வளர்ச்சி அலுவலர் ரவி அனைவரையும் வரவேற்றார்.

இந்நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் கலந்து கொண்டு 8 கோடியே 42 லட்சத்து 28 ஆயிரத்து 200 ரூபாய் மதிப்பீட்டில் 238 பயனாளிகளுக்கு வீடு கட்டுவதற்கான உத்தரவு ஆணைகளை வழங்கி சிறப்புரை யாற்றினார்.

அப்போது நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்;

முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆட்சியில் தீப்பிடிக்காத கான்கிரீட் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தினை இந்தியாவிலேயே முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர்.

ஒன்றிய அரசின் நிதி உதவி இல்லாமல் முதன் முதலில் கலைஞர் தீப்பி டிக்காத கான்கிரீட் வீடுகளை கட்டிக் கொடுத்த பெருமை கலைஞருக்கு அன்றும் இன்றும் இருக்கிறது.

அவர் வழியில் இன்று திராவிட மாடல் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்றைக்கு கலைஞர் கனவு இல்லம் வீடுகள் கட்டும் திட்டத்தில் தமிழக முழுதும் 1 லட்சம் வீடுகள் கட்டுவதற்கும்

விழுப்புரம் மாவட்டத்தில் 4700 வீடுகள் கட்டுவதற்கு உத்தரவிட்டுள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தில் ஒரு வீட்டிற்கு 3 லட்சத்து 50 ஆயிரம் முழுவதும் தமிழக அரசின் நிதியில் கட்டுவதற்கு நிதியை ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டுள்ளதாக தெரிவித்த அமைச்சர் செஞ்சி.மஸ்தான் ஒன்றிய அரசு தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு கொடுக்கும் நிதியை காட்டிலும் 2 மடங்கு கூடுதலாக தொகை கொடுத்து கிராமத்தில் தொகுப்பு வீடுகளை கட்டுவதற்கு முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளதாகவும், கடந்த 3 ஆண்டுகளில் விழுப்புரம் மாவட்டத்தில் மட்டும் 15ஆயிரம் கலைஞர் கனவு இல்லம் கட்டப்பட்டுள்ளதாக அமைச்சர் செஞ்சி மஸ்தான் கூறினார்.

இதில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர்.சேகர்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள்டாக்டர் மாசிலாமணி, சேதுநாதன்,ஒன்றிய செயலாளர்கள் மணிமாறன்,செழியன்,துணை வட்டார வளர்ச்சி அலுவலர் வெண்பா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

வட்டார வளர்ச்சி அலுவலர் இராமதாஸ் நன்றி கூறினார்.

### தலைவர் மற்றும் 4 உறுப்பினர்களுடன்

# தகவல் தொழில்நுட்பத் துறைக்கு தனியாக குழு அமைத்திடுக!

## மக்களவையில் மசோதாவை முன்மொழிந்து சி.என்.அண்ணாதுரை பேச்சு!



புதுடெல்லி, ஆக. 13-

மக்களவையில் திருவண்ணாமலை தொகுதி கழக உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை தகவல் தொழில் நுட்பத்திற்கு குழு அமைப்பது தொடர்பான மசோதா ஒன்றை ஏற்கனவே தாக்கல் செய்திருந்தார். அந்த மசோதா கடந்த வாரம் மக்களவை முடியும் தருவாயில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அந்த மசோதா மீது சி. என்.அண்ணாதுரை பேசியதாவது:-

இந்த நாட்டில் தகவல் தொழில்நுட்பத் துறை மேலும் வளர்ச்சி பெற வேண்டும் என்பதற்காக அதை முறைப்படி கட்டமைக்க குழு அமைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி தாக்கல் செய்யப்பட்ட இந்த மசோதாவை முன்மொழிகிறேன்.

அந்தக் குழுவில் தலைவர் ஒருவரும் நான்கு உறுப்பினர்களும் உரிய தகுதியின் அடிப்படையில் ஒன்றிய அரசு நியமிக்க வேண்டும்.

வருங்கால வளர்ச்சிக்கு தகவல் தொழில்நுட்பம் தான் மூலகாரணமாக இருக்கும். கல்வி, சுகாதாரம், வேளாண்மை, விளையாட்டு, பாதுகாப்பு, நலன் மற்றும் பல்லுயிர் தொடர்பான அனைத்தின் வளர்ச்சிக்கும் அதுதான் மூலகாரணமாக அமையும்.

ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு அரசு தகவல் தொழில் நுட்பத்தில் தீவிர கவனம் செலுத்தி மின் ஆளுமை மற்றும் அரசு துறைகளில் விழிப்புணர்வை ஏற்படுத்தி, அத்துறைக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது.

விஞ்ஞானிகளுக்கு தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு, மற்றுமுள்ள மேலாண்மைதுறைகளுக்கு அது சிறந்த வாய்ப்பை ஏற்படுத்துகிறது. செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் அனைத்து சமூகப் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களும், நாகரிக வளர்ச்சியும் ஏற்பட வாய்ப்புண்டு.

10 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகையுள்ள நகரங்களிலும் மேலும் வாய்ப்புள்ள நகரங்களிலும் தொழில்நுட்பப் பூங்காக்களை அமைக்க அந்தக் குழு முன்வர வேண்டும்.

இன்றைய நிலையில் நாட்டில் அதிவேகமாக வளர்ந்து வரும் நிலையில் உள்ளது தகவல் தொழிநுட்பம். அந்தத் துறை மென் மேலும் வளர நல்ல வாய்ப்பு உள்ள காரணத்தால் அதற்கு அதிக மூலதனம் தேவைப்படுகிறது.

தமிழ்நாட்டில் முதல்வர் தளபதி அவர்கள், தகவல் தொழில்நுட்பத்திற்கு சிறந்த முறையில் ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து வருவதோடு புதிய முதலீடுகள் பெற ஊக்கமளித்து வருகிறார். அரசாங்கத்திற்கு அதிக அளவு வருமானம் ஈட்டித் தரும் தொழிலாக ஐ.டி. இருந்து வருகிறது.

தொழில் நுட்பத் துறைக்கு தேசிய அளவில் கொள்கை ஒன்று வகுக்கப்பட வேண்டும்.

இந்த நாட்டில் உள்ள பல்வேறு மாநிலங்களின் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு வழிகாட்டக் கூடியது இந்த தகவல் தொழில்நுட்பத் துறை. குறிப்பாக வளர்ச்சி அடைந்த மாநிலங்களான தமிழ்நாடு உள்ளிட்டவைகளுக்கு மிக மிக அத்தியாவசியத் தேவையாகும்.

தமிழகத்தை ஒரு ட்ரில்லியன் டாலர் மாநிலமாக உயர்த்த முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவித்து செயல்பட்டு வருகிறார் என்பதை தெரிவிக்க மகிழ்ச்சி அடைகிறேன். அத்துடன் உலகளாவிய தகவல் தொழில் நுட்பத் துறையின் உறைவிடமாக தமிழ்நாட்டை மாற்ற அவர் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்.

ஏற்கனவே தமிழ்நாடு அரசு ஐ.டி.பூங்காக்களை தமிழ்நாடு முழுவதும் அமைத்து அத்துறை தமிழ்நாட்டில் முக்கியத்துவம் பெற்று வருகிறது என்பதை தெரிவித்து இந்த மசோதாவை முன்மொழிகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.